# செய்தி வெளியீடு

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, 20.01.2015 இன்று சென்னை சேப்பாக்கம் எழிலக வளாக கூட்டரங்கில், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் இரா.காமராஜ் அவர்களின் தலைமையில் குடும்ப அட்டைகளில் உள்தாள் ஒட்டும் பணி நிறைவு மற்றும் பொது விநியோக திட்ட செயல்பாடுகள் குறித்த மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அலுவலர்களுடனான மாநில அளவிலான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

தற்போது புழக்கத்திலுள்ள குடும்ப அட்டைகளின் செல்லத்தக்கக் காலத்தை 1.1.2015 முதல் 31.12.2015 வரை மேலும் ஓராண்டிற்கு நீட்டிக்கும் வகையில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நியாயவிலை அங்காடிகளிலும் 15.12.2014 முதல் நடைபெற்று வரும் உள்தாள் ஒட்டும் பணியினை மாவட்ட வாரியாக ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்று வரை 1 கோடியே 91 லட்சத்து 94 ஆயிரத்து 781 அட்டைகளில் உள்தாள் ஒட்டும் பணி (97%) நிறைவடைந்துள்ளது என்று தெரிவித்தார். உள்தாள் இணைப்பு பெறுவதற்கு காலக்கெடு ஏதும் நிர்ணயிக்கப்படாததால் மீதம் உள்ள குடும்ப அட்டைதாரர்களும் விரைவில் தங்களின் அட்டைகளை உள்தாள் ஒட்டி பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும், இதனை அலுவலர்களும் துரிதப்படுத்த வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார். எப்பொருளும் வேண்டா ஏனைய அட்டைதாரர்களும் அவர்களுடைய அட்டைகளை புதுப்பித்துக்கொள்ள www.consumer.tn.gov.in என்ற இணையதளத்தில் 31.3.2015 வரை புதுப்பித்துக்கொள்ள வசதி செய்து தரப்பட்டுள்ளது.

குடும்ப அட்டைதாரர்களின் குறைகளை களைவதற்கு '' **குறைதீர் முகாம்கள்''** அனைத்து மாவட்டங்களிலும் மாதத்தின் இரண்டாம் சனிக்கிழமை அன்று நடைபெறுகிறது. காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை நடைபெறும் இம்முகாம்களில் பெறப்படும் மனுக்கள் மீது அன்று மாலைக்குள் தீர்வு காணப்படுகிறது. 10.01.2015 வரை இம்முகாம்களின் மூலம் 3 லட்சத்து 18 ஆயிரத்து 173 மனுதாரர்கள் பயனடைந்துள்ளனர். 10.01.2015 அன்று நடைபெற்ற முகாமில் மட்டும் பெறப்பட்ட 11 ஆயிரத்து 473 மனுக்களில், 11 ஆயிரத்து 103 மனுக்கள் மீது அன்றே தீர்வு காணப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்பட்டு வரும் தமிழக அரசு 31.12.2014 வரை 11 லட்சத்து 43 ஆயிரத்து 642 புதிய குடும்ப அட்டைகளை உரிய மனுதாரர்களுக்கு வழங்கி உள்ளது என்றும் 3

லட்சத்து 48 ஆயிரத்து 025 போலி குடும்ப அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டு ரத்து செய்யப்பட்டது என்றும் மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

அரசின் நலதிட்டங்களின் முழு பயன்களும் உரியவர்களை சென்றடைவதை நோக்கமாகக்கொண்டு அத்தியாவசியப் பொருள்களின் கடத்தல் தடுப்பு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டு இன்று வரை 21,508 நபர்கள் கைது செய்யப்பட்டு, அவற்றில் 632 நபர்கள் தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் (BM Act) கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த கலந்தாய்வுக் கூட்டத்தில் அரசு உணவுத் துறை முதன்மை செயலாளர் திரு.முகம்மது நசீமுத்தின்,இ.ஆ.ப., உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு.சு.கோபாலகிருஷ்ணன்,இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திரு.எம்.சந்திரசேகரன்,இ.ஆ.ப., உணவுப் பொருள் குற்றப்புலனாய்வுத் துறை கூடுதல் இயக்குனர் திரு.கே.இராதாகிருஷ்ணன், இ.கா.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அரசு முதன்மை செயலாளர்
(உணவு மற்றும் கூட்டுறவுத்துறை)

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9**